[2018 ஜனவரி 10

அட்டைகள் இருக்க வேண்டும். இந்தமாதிரி நிபந்தனைக்குட்பட்டு அவை இருக்கும்பட்சத்தில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிச்சயமாக நிறைவேற்றப்படும். அதேநேரத்தில் மக்கள் எளிதில் அணுகமுடியாத சூழ்நிலை இருக்குமேயானால், சிறப்பினமாகக் கருத்திற்கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவரே இதில் முடிவு எடுக்கலாம். அவருக்கு சிறப்பு அதிகாரம் இருக்கிறது. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை கனிவோடு பரிசீலித்து எதிர்காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச்சொல்லி, நிச்சயமாக அந்தக் கடையைத் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

12—

துணை மின் நிலையம்

***5590—திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னம் தொகுதி, குன்னம் வட்டம், காடூர் ஊராட்சி, நல்லறிக்கை கிராமத்தில் புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் கோரிய அவர் தொகுதியிலுள்ள வேப்பூர் ஊராட்சி ஒன்றியம், காடூர் ஊராட்சி, நல்லறிக்கை கிராமத்தில் 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும்

2018 ஜனவரி 10]

மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனக்கென வாழாமல், தமிழக மக்களுக்காக தன்னை அர்ப்பணித்து வாழ்ந்து மறைந்த இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களையும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினராக, கிளைக் கழகச் செயலாளராக, ஒன்றிய, நகரக் கழகச் செயலாளராக மற்றும் தலைமை நிலையச் செயலாளராக, கொள்கை பரப்புச் செயலாளராக, மாவட்டக் கழகச் செயலாளராக, படிப்படியாக இந்தக் கழகத்திற்காக உழைத்து, கழகம் நடத்திய ஆர்ப்பாட்டம், போராட்டங்களிலெல்லாம் கலந்துகொண்டு தொண்டர்களோடு தொண்டராக வளர்ந்து இன்று இந்த அவையில் அமர்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சாலையில் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பார்த்து கொப்பளித்து சந்தோஷப்பட்ட என்னை அம்மாவின் இருக்கையின் முன் அமரவைத்து, இந்த இருக்கையில் அமர்வதற்கு அம்மாவிடம் என்னை அறிமுகப்படுத்திய எனது அரசியல் ஆசான் அருமை அண்ணன் திரு. வைத்திலிங்கம் அவர்களையும் வணங்குகிறேன். கேட்டதைக் கொடுக்கக்கூடிய அரசு அம்மாவின் அரசு என்பதை நிரூபிப்பதைப்போல, நான் கேட்ட கேள்விக்கு, தருவதாகக் கூறிய அண்ணன் அவர்களுக்கு நன்றி கூறி, பெரம்பலூர் மாவட்டத்தில், பெரம்பலூரில் இயக்கலும் பராமரித்தலும் பணிக்காக 25 உதவிப் பொறியாளர்களும் மற்றும் அங்கு செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய ஒன்பது 110 கே.வி.துணை மின் நிலையங்களில் 9 துணைப் பொறியாளர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும் 4 sub–station–களுக்கு proposal அனுப்பப்பட்டு 2 sub–stations அமைக்கும் பணி நடைபெற்றுவருகிறது. அதிலும் துணைப் பொறியாளர்கள் பணியாற்றிவருவதால் அங்கிருக்கக்கூடிய கோட்டப் பொறியாளருக்கு பணிச் சுமை அதிகமாக இருக்கிறது.

எனவே, பெரம்பலூர் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து குன்னம், கிருஷ்ணாபுரம், லெப்பைகுடிகாடு ஆகிய Division–களைப் பிரித்து புதிதாக ஒரு கோட்டப் பொறியாளர் அலுவலகத்தை மாண்புமிகு அம்மாவின் அரசு அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தத் துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதித்த காரணத்தினால் அந்தத் துணை மின் நிலையம் அமைக்கும் பணிகளை உடனடியாகத் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சொல்லியிருந்தேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தை பிரித்து அதே மாவட்டத்தில் இன்னொரு கோட்டப் பொறியாளர் அலுவலகம் வேண்டும் என்று கேட்டிருக்கின்றார். அங்கு அதிகாரிகள் அதிகமாக இருக்கிறார்கள்; 110 கே.வி. துணை மின் நிலையங்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் கோட்டப் பொறியாளர் அலுவலகம் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். நேற்றையதினம்தான், ஜெயங்கொண்டம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கேட்டதற்கு கோட்டப் பொறியாளர் அலுவலகத்தை அங்கு கொடுப்பதாகச் சொல்லியிருக்கின்றோம். ஜெயங்கொண்டமும், உறுப்பினர் கூறுகின்ற மாவட்டமும் அருகருகே உள்ள மாவட்டங்கள் என்பதால், உடனடியாகக் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தைப் பிரிப்பது தொடர்பாக பரிசீலனை செய்வதற்கு வாய்ப்பு குறைவு. எதிர்காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

2018 ஜனவரி 10]

திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில் பரிசீலனை செய்து எங்களது தொகுதிக்கு இன்னொரு கோட்டப் பொறியாளர் அலுவலகம் கிடைக்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.*

திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் சிறிதளவு பெய்த மழையை நம்பி விவசாயம் செய்திருக்கக்கூடிய விவசாயிகள்,* transformer *பற்றாக்குறையால் கடுமையான மின் பற்றாக்குறை இருப்பதால் பயிர்களுக்கு நீர் பாய்ச்ச முடியாமல் கடும் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். பயிர்கள் வாடுகின்ற, கருகுகின்ற நிலையில் இருக்கின்றன. அதிகாரிகளைக் கேட்டால் நாங்கள்* transformer*–க்கு* order *கொடுத்திருக்கிறோம். இன்னும் வரவில்லை. அவை வந்த பிறகு பொருத்தித் தருகிறோம் என்கிறார்கள். எனவே, விவசாயிகளைக் காப்பாற்றுவதற்கு புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ஏறக்குறைய 100–க்கும் மேற்பட்ட* transformer*–கள் தேவைப்படுகின்றன. குறைந்தபட்சம் 70 முதல் 80* transformer*–களாவது உடனடியாக அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் புதுக்கோட்டை பகுதியில்* transformer *பற்றாக்குறை இருப்பது உண்மை. அதற்குக் காரணம் உயர் நீதிமன்றத்திலே ஒரு சிலரால் போடப்பட்ட வழக்கு. கிட்டத்தட்ட ஓராண்டு காலமாக* transformer *வாங்குவதற்கு தடையாணை இருந்த காரணத்தால், வாங்கமுடியாமல் போய்விட்டது. கடந்த வாரம்தான் அந்தத் தடையாணை நீக்கப்பட்டிருக்கிறது. எங்கெங்கு* transformer *தேவையோ அந்தந்த பகுதி* S.E.*–க்களே அவற்றை உடனடியாக வாங்கிக்கொள்ளலாம் என்று உத்தரவைப் பிறப்பித்திருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய புதுக்கோட்டை பகுதியில் முன்னுரிமை அடிப்படையில்* transformer *அமைக்க நடவடிக்கை*

எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். என்னுடைய திருவள்ளூர் தொகுதியிலே பாப்பரம்பாக்கம், பட்டறைபெரும்புதூர் மற்றும் திருவேலங்காடு பகுதிகளில் துணை மின் நிலையங்கள் அமைக்கப்படுமா என்று கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கேள்வியாக கேட்கப்பட்டு, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குண்டான நடவடிக்கை எடுத்தாகிவிட்டது என்று சொன்னார்கள். அங்கு துணை மின் நிலையம் அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணி நிலுவையில் இருக்கின்ற காரணத்தால் அந்த துணை மின் நிலையங்கள் அமைக்கும் பணிகள் எப்போது முடியும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த முறையே இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தார்கள். நான் அப்போதே சொல்லியிருந்தேன். சர்க்கரை ஆலைக்குச் சொந்தமான இடத்தை பெறுவதிலேதான் காலதாமதமாகிறது. நிலத்தின் விலை அதிகமாக இருந்த காரணத்தினால் அவர்களுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறது. அந்த நிலத்தை மின் வாரியத்திற்கு அவர்கள் ஒப்படைத்தால் உடனடியாக துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று சொன்னேன். கடந்த வாரம் நான் ஆய்வுக்கூட்டம் நடத்தியபோது அந்தப் பணிகள் முடிகின்ற தருவாயில் இருக்கின்றன என்று தெரியவந்தது. ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 123 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு பேரவை விதி 110–ன்கீழ் அறிவித்திருக்கிறார்கள். எங்கெங்கு நிலம் முதலில் கிடைக்கின்றதோ அங்கெல்லாம் துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று

2018 ஜனவரி 10]

சொல்லியிருந்தேன். இந்த வாரத்திற்குள் நில எடுப்புப் பணிகள் முடிந்துவிட்டால், உடனடியாக அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

13—

பாதாள சாக்கடைத் திட்டம்

***369—திரு. எஸ்.ஆர். இராஜா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செம்பாக்கம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செம்பாக்கம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் வாரியம்மூலம் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கை பெறப்பட்டவுடன் உரிய நிதி ஆதாரங்களைப் பெற்று பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*